திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிற ஆயிரக்கணக்கான கூட்டுறவு ஸ்தாபனங்களில் நூற்றுக் கணக்கான ஸ்தாபனங்களுக்கு முறையாகவும், உடனடியாகவும் நிதி இன்றைக்குக் கிடைக்கவில்லை என்பதைக் கூறினார்கள். இனிமேலாவது அவைகளுக்கு உடனடியாகக் காலாகாலத்தில—ஏனென்றால் அவைகளெல்லாம் மிகக்குறைந்த நிதியை வைத்து நடத்தப்படுகின்ற ஸ்தாபனங்கள— நிதி கொடுப்பதற்கு வேண்டிய மாற்று ஏற்பாடுகளைச் செய்ய சர்க்கார் முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே அந்த நிதி வசதிக்கு ஏராளமான ஏற்பாடுகள் இருக்கின்றன. கூட்டுறவு தலைமைச் சங்கம் அவர்களுடைய பிரைமரி சொஸைடியிலே வாங்குகின்ற சரக்குகளுக்கு பணம் கொடுப்பதற்கு ரிசர்வ் வங்கி ஒரு கொள்கையின் அடிப்படையிலே முன் பணம் தருகிறார்கள். அதை வைத்து உதவி செய்கின்றோம். சரக்குகளில் தேக்கம் அடைகின்ற காரணத்தால் தலைமைச் சங்கத்திலே சில சமயத்திலே இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. அப்பொழுதைக்கப்பொழுது அவர்கள் அரசாங்கத்தை அணுகுகிறபொழுது அரசாங்கம் உதவி செய்கிறது.

(எ) செங்கற்பட்டு மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியுள்ள கடன்களை மூன்று ஆண்டுக் காலத் தவணைக் கடன்களாக மாற்றி வசூலை நிறுத்திவைத்தல்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"செங்கற்பட்டு மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்ட கடன்களை தற்போதைக்கு நிறுத்திவைத்து, அதை மூன்று ஆண்டுகால தவணைக் கடன்களாக மாற்றி உடனே வசூலை நிறுத்தி வைக்க வேண்டுவதுபற்றி."

* **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் முழுவதிலும் வறட்சி நிலைமை பரவியுள்ளதாலும், பயிர்கள் விளையாததாலும், கூட்டுறவு நாணயச் சங்கங்களின உறுப்பினர்கள், குறுகிய காலக் கடன்களை மூன்றுண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படத்தக்க நடுத்தர காலக் கடன்களாக மாற்றும்படி விண்ணப்பித்துள்ளார்கள். செங்கற்பட்டு மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால், இயல்பான பயிர் விளைச்சலில் 8-ல் 3 பகுதியே இப்பொழுது விளைந்துள்ளது என்று வருவாய்த் துறை அதிகாரிகள் சான்று அளித்துள்ளனர். காஞ்சிபுரம் கூட்டுறவு மத்திய வங்கி தன்னுடன் இணைந்துள்ள சங்கங்களிடமிருந்து குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்ற வேண்டுமென்று விண்ணப்பங்களை பெற்றுள்ளது. ரூ. 32,18,036 மதிப்புள்ள குறுகிய காலக் கடன்களை, நடுத்தர காலக் கடன்களாக மாற்ற வேண்டுமென்று மதிப்பிடப்படுகிறது. இத்தொகையில் தனது நிதியிலிருந்து ரூ. 5,900 கொடுக்கவும், வேளாண்மைக் கடன் நிலைப்படுத்தும் நிதியிலிருந்து அதாவது, Agricultural Credit Stabilisation Fund-லிருந்து ரூ. 4,77,136 கொடுக்கும்படி கோரியும், தமிழ்நாடு கூட்டுறவு வங்கியிலிருந்து ரூ. 27,35,000 வரை நடுத்தரக் காலக் கடன் கொடுக்கும்படி கோரியும், காஞ்சிபுரம் கூட்டுறவு மத்திய வங்கி செயற்குறிப்புகளை அனுப்பியது. காஞ்சிபுரம் கூட்டுறவு மத்திய வங்கி கேட்டிருந்த 27,35,000 ரூபாயை தமிழ்நாடு கூட்டுறவு வங்கி வழங்கியுள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டத்தில், குறிப்பாக 1966-ம் ஆண்டு புயலடிக்கப்பட்டு அந்த 1966-ம் ஆண்டிலே வாங்கப்பட்ட கூட்டுறவு கடன்களுக்கு ஓராண்டு காலம் தவணை வேண்டுமென்று அப்பொழுது கேட்கப்பட்டு, ஓரளவு 1967-ம் ஆண்டு அது நீடிக்கப்பட்டது. 1968-ல் இயற்கையின் காரணமாக திரும்பவும் வறட்சி ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக இப்பொழுதும் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதால் ஏற்கனவே தவணை தவறிய கடன்களுக்கு இந்த சலுகை அளிக்க வேண்டுமென்ற கருத்தை ஒட்டி, பல விண்ணப்பங்கள் தரப்பட்டிருக்கின்றன. அதன் பேரிலே உடனடியாக சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: புயல் அடிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளுடைய கடன் தவணை தவறி இருக்குமானுல் அவற்றையும் சேர்த்து கவனிக்கும்படியாக நான் கூட்டுறவு வங்கியைக் கேட்டுக்கொள்ளச் சம்மதிக்கிறேன்.

(ஏ) கோவை, பல்லடம், அவிஞசி வட்டங்களில் பருவ மழையின்மையும், கூட்டுறவுத் துறைக் கடன்கள் வசூலிப்பை ஒற்றிவைத்தலும்

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்:

"கோவை, பல்லடம், அவிஞசி வட்டங்களில் கடந்த மூன்று ஆண்டுகாலமாக தொடர்ந்து பருவமழை தவறிய காரணத்தால் விளைச்சல் இன்றி விவசாயப் பெருமக்கள் மிகுந்த கஷ்ட நஷ்டங்களுக்கு உட்பட்டுள்ளதால் அரசாங்கக் கூட்டுறவுத் துறை கடன்களை ஒத்திவைக்க வேண்டியதுபற்றி"

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: கோவை, பல்லடம், அவிஞசி வட்டங்களைப் பொறுத்தவரையில், கீழ்க்கண்ட பகுதிகளில் மானுவாரிப் பயிர்களின் விளைச்சல் 25 சதவீதத்திற்குக் குறைவாகவும், கிணறுகள்மூலம் பாசனம் பெறும் பயிர்களின் விளைச்சல் 35 சதவீதத்திற்குக் குறைவாகவும் உள்ளது என்று குறிப்பிட்டு, அவற்றிற்கு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அணுவாரிச் சான்றிதழை வழங்கியுள்ளார்:—

அவிஞசி வட்டம்—வட்டமுழுவதும், கோயம்புத்தூர்—தொண்டமுத்தூர் பிர்க்காவைத்தவிர மற்ற எல்லாப் பகுதிகளும், பல்லடம், வட்டம்—வட்டம் முழுவதும்.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் அணுவாரிச் சான்றிதழ் அளிக்கப்பட்ட பகுதிகளில், கூட்டுறவுச் சங்கங்களால் இதுவரை கொடுக்கப்பட்டுள்ள குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு, கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிக்குத் தெரியப்படுத்தி இருக்கிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல்லடம் வட்டத்திலேயும் அவிஞசி வட்டத்திலேயும் 25 சதவிகிதம் 35 சதவிகிதத்திற்கும் குறைவாக விளைச்சல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறினுர்கள். நடுத்தரக் கடன் என்று மட்டும் அல்லாமல் ஓராண்டுக் காலத்திற்குத் தள்ளி வைக்கக்கூடிய முறையிலே அதை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.